உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 05.07.2026 • மலர் 04 • இதழ்: 186 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 05.07.2026 • Vol : 04 • Issue : 186 • Page : 4 • Rs. 5/-

# எரிபொருள் குறித்து பரப்பப்பட்ட வதந்திகள் பொய்யாக்கப்பட்டன

## ஜெய்ப்பூரில் பிரதமர் மோடி பேச்சு

ஜெய்ப்பூர்: ஜூலை 5

உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை இந்தியா திறம்பட சமாளித்தது டன், அதன் சுமையை பொதுமக்கள் மீது பெரும ளவில் விழாமல் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்ததாக பிரதமர் நரேந் திர மோடி தெரிவித்துள் ளார். ராஜஸ்தானின் பாலோத்ரா மாவட்டம் பச்பத்ராவில் நாட்டின் முதல் கிரீன்ஃபீல்ட் ஒருங் கிணைந்த சுத்திகரிப்பு மற் றும் பெட்ரோ கெமிக்கல் வளாகத்தை திறந்து வைத்த பிரதமர் மோடி, பல்வேறு வளர்ச்சித் திட் டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

மேற்காசியாவில் ஏற் பட்ட நெருக்கடியின் போது இந்தியா தனது எரி சக்தி இறக்குமதி ஆதாரங் களை விரிவுபடுத்தியது. நெருக்கடிக்கு முன்பு சுமார் 25 முதல் 26 நாடுகளில் இருந்து எரிசக்தி இறக்குமதி செய் யப்பட்ட நிலையில்,

அந்த எண்ணிக்கை 40 க்கும் மேற்பட்ட நாடுக ளாக உயர்த்தப்பட்டது.

இது இந்தியாவின் ராஜ தந்திர நடவடிக்கைகளால் சாத்தியமானது. சர்வதேச சந்தையில் கச்சா எண் ணெய் விலை உயர்ந்த தால், கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.75 ஆயிரம் கோடிக்கும் அதிக மான இழப்பு ஏற்பட்டது. இருப்பினும்,

அந்தச் சுமையை அரசு ஏற்றுக்கொண்டது. மேலும், பெட்ரோல் மற் றும் டீசல் மீதான கலால் வரியை லிட்டருக்கு ரூ.10 குறைத்து, பொதுமக்கள் மீது கூடுதல் சுமை ஏற்ப டாமல் பாதுகாத்தோம்.

இந்தியாவுக்கு எதிராக வதந்திகள் பரப்பப்பட் டது. மக்களைத் தூண்டி விட முயற்சிகள் நடை பெற்றது.

இந்தியா தோல்வியடை யும் என எதிர்பார்த்தவர் கள் ஏமாற்றத்தில் உள்ள னர். இந்தியா தற்போது உலகின் நான்காவது மிகப் பெரிய எண்ணெய் சுத்திக ரிப்பு திறன் கொண்ட நாடாக உருவெடுத்துள்ள தாகவும், ஈரான் மற்றும் அமெரிக்கா இஸ்ரேல் கூட் டணிக்கு இடையிலான போர் காரணமாக ஏற் பட்ட எரிபொருள் மற்றும்



உர விநியோக பாதிப்புக நீண்டகால திட்டங்கள் தது" என்
ளையும் மத்திய அரசின் மூலம் சமாளிக்க முடிந் றார்.

# குற்றவாளிகளுக்குச் சட்டத்தின் மீதான பயமே அற்றுப் போயுள்ளது: நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூலை 5

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்தி ருப்பதாவது;

சட்டம் ஒழுங்கு குறித்து கவர்னரிடம் புகார் அளித்த சில மணி நேரங்களிலேயே நடைபெற்ற கொடூரம்!

இன்று காலை தான் தமிழகத்தின் சட் டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரிடம் நேரில் புகார் மனுக்களை அளித்திருந் தோம். ஆனால், நாம் கவலை தெரிவித்து மனு அளித்த சில மணி நேரங்களிலேயே, மாநிலப் பாதுகாப்பின் அவல நிலையை நிரூபிக்கும் வகையில் ஒரு கொடூரமான செய்தி வெளியாகியுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே, கஞ்சா போதையில் 23 வயது வாலிபர் ஒருவன், 60 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ள சம்பவம் ஒட்டுமொத்த தமி ழகத்தையும் அதிர்ச்சி யில் ஆழ்த்தியுள்ளது. முதல்அமைச்சர் விஜய் ஆட்சியில் கஞ்சா புழக் கம் எந்தளவுக்குக் கட் டுப்பாடின்றி பெருகி யுள்ளது என்பதற்கு இச்சம்பவமே சாட்சி யாகும். தற்போதைய தவெக அரசும் போதைப்பொருள் புழக்கத்தைத் தடுக் கவோ, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக் கவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. குற்றவாளி களுக்குச் சட்டத்தின் மீதான பயமே அற்றுப் போயுள்ளது. பாதிக்கப்பட்ட மூதாட் டிக்கு நீதி கிடைக்க குற்றவாளிக்குக் கடு மையான தண்டனை பெற்றுத் தர வேண் டும். மேலும், தமிழகத்தை அச்சுறுத்தும் போதைப்பொருள் புழக்கத்தை இரும் புக்கரம் கொண்டு ஒடுக்க தவெக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# நாங்க இருக்கோம்; மீண்டும் வருவோம்..! அறிவாலயத்தில் கேட்கும் உடன்பிறப்புகளின் குரல் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜூலை 5

திமுக தலைவரும், முன்னாள் முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட் டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"சோதனைகள் நமக்கென்ன புதிதா? அந்த நெருப் பாறுகளை நீந்திக் கடப்போம் வா" என்று கம்பீரமாய் எழுந்து நிற்கும் கற்கோட்டையான அறிவாலயத்தின் வாயில் தினமும் வரவேற்கிறது. நாள்தோறும் நூற் றுக்கணக்கானோர் என்னைக் காண வருகின்றனர். அவர்கள் என்னிடம் சொல்வதெல்லாம், "நாங்க இருக்கோம். நாம மீண்டும் வருவோம்!". இந்தச் சொற்கள் போதுமே, எதிரிகளை ஒருசேர வீழ்த்தும் வலிமையைக் கொடுக்க!

காலை அறிவாலயத்தில் உங்களைச் சந்தித்து கருத் துகளைக் கேட்பதும், மாலை தொடங்கி இரவு வரை நீங்கள் பதிவு செய்த கருத்துகளைப் படிப்பது என வும் அன்றாடம் உங்களின் எண்ணங்களை ஆய்ந்தறி வதையே வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

உங்களது எண்ணங்களின் அடிப்படையில், கழகத் தின் மறுசீரமைப்பிற்காக, மறுகட்டுமானத்திற்காக, இளமையும் அனுபவமும் கலந்த "மறுசீரமைப்பு ஆலோசனைக் குழு"வையும் இப்போது அமைத்தி ருக்கிறேன்.

கிளை முதல் தலைமை வரை மறுசீரமைப்பு குறித்த பரிந்துரைகளை என்னிடம் வழங்கிட அறிவுறுத்தி யுள்ளேன்.

உடன்பிறப்புகளின் உணர்வுகளை உள்வாங்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த நூறாண்டு களுக்கான பயணத்தைத் திட்டமிடும் பணிகளைத் தொடங்கியுள்ள நிலையில், இருவாரப் பயணமாக இன்று அயலகம் செல்கிறேன். அயலகத்தில் இருந் தாலும் அறிவாலயத்தில்தான் என் மனம் இருக்கும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# குமரியில் அனைத்து தலைமை தபால் நிலையங்களில் சர்வதேச அஞ்சல் சேவை

## பொதுமக்கள் பயன்படுத்த அஞ்சல் துறை அழைப்பு

நாகர்கோவில், ஜூலை. 5

இந்திய அஞ்சல் துறை மூலம் உலகின் பல்வேறு நாடுகளுக்கு பாதுகாப்பாக வும், நம்பகத்தன்மையுடனும், விரைவா கவும் அஞ்சல்கள் மற்றும் பார்சல்களை அனுப்பும் சர்வதேச அஞ்சல் சேவைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வழங் கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வெளி நாடுகளில் வசிக்கும் உறவினர்கள், மாணவர்கள், தொழில் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், சிறு மற்றும் குறு தொழில் முனைவோர் ஆகியோர் தங்க ளது தேவைக்கேற்ப சர்வதேச ஏர் பார் சல், சர்வதேச பதிவு தபால் , சர்வதேச விரைவு தபால் போன்ற சேவைகளைப் பயன்படுத்தி ஆவணங்கள், பரிசுப் பொருட்கள் மற்றும் வணிகப் பொருட் களை வெளிநாடுகளுக்கு எளிதாக அனுப்பலாம்.

இந்த சேவைகள் நியாயமான கட்ட ணத்தில், பாதுகாப்பான கையாளுதல், டிராக்கிங் வசதி மற்றும் விரைவான விநி யோகத்துடன் வழங்கப்படுகின்றன.

சர்வதேச அஞ்சல் சேவை வசதி தற் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தலைமை மற்றும் துணை அஞ்சல் அலுவலகங்களிலும் உள்ளது. எனவே, பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் இந்திய அஞ்சல் துறையின் சர்வதேச அஞ்சல் சேவை களை முழுமையாகப் பயன்படுத்தி பய னடையுமாறு கன்னியாகுமரி கோட்ட அஞ்சலககண்காணிப்பாளர்தீத்தாரப்பன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மேகேதாட்டு அணை கட்ட கர்நாடகா தீவிரம் காட்டும் நிலையில் தமிழகத்தில் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கும் அவலம்: அன்புமணி ராமதாஸ்



மேகேதாட்டு அணை கட்ட கர்நாடகா தீவிரம் காட்டும் நிலையில் தமிழகத்தில் எம்எல் ஏக்களை விலைக்கு வாங்கும் அவலம் அன்புமணி ராமதாஸ் திருச்சி செய்தியாளர் சந்திப்பில் பேசியது: மேகேதாட்டு அணை கட்ட கர் நாடகா தீவிரம் காட்டும் நிலை யில் தமிழகத்தில் எம்எல்ஏக் களை விலைக்கு வாங்கும் அவலம் அன்புமணி ராமதாஸ்

மேகேதாட்டு அணை கட்ட கர்நாடகா தீவிரமாக வேலை செய்து வரும் நிலையில் தமிழகத்தில் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கும் பேரம் நடந்து வருகிறது என பாமக தலை வர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள் ளார். இது குறித்த விபரம் வருமாறு ;

மேகேதாட்டுவில் அணை கட்டக் கூடாது என வலியுறுத்தி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், காவிரி நீர் தமிழ கத்துக்கு வந்தடையும் பிலுகுண்டுவில் இருந்து பிரச்சார பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக திருச்சி தஞ்சை மாவட்டங்களை இணைக்கும் கல்லணையை இன்று காலை அவர் பார் வையிட்டார்.

வரண்டு கிடந்த காவிரியை பார்வை யிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அன் புமணி தெரிவித்ததாவது; மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடக முதல்வர் டி. கே.சிவக்குமார் பொய் சொல்கிறார். கர் நாடகாவை விட தமிழகம்தான் அதிகம் பயன்பெறும் என்பது முதல் பொய்.

பெங்களூரு குடிநீர் தேவைக்காக என் பது 2வது பொய். உச்ச நீதிமன்றம் அனு மதி என்பது 3வது பொய். மேகேதாட்டு வில் அணைக் கட்டினால் தமிழகத்துக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். கே.ஆர். எஸ் அணை மூலம் பெங்களூருக்கு தண் ணீர் கிடைக்கிறது. கர்நாடக அரசு காவிரி விவகாரத்தில் எந்த தீர்ப்பையும் மதிப்ப தில்லை.

மேகேதாட்டு அணை கட்ட கர்நாடகா தீவிரமாக வேலை செய்து வரும் நிலை யில் தமிழகத்தில் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கும் பேரம் நடந்து வரு கிறது. 2028ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக டி. கே.சிவக்குமார் அணை கட்ட முயற்சிக் கிறார்.

ராசி மணலில் அணைக்கட்டுவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளது. நாம் அங்கு அணைக்கட்டுவோம் என்றால் அதற்கு மாறாக அவர்கள் மேகேதாட்டு வில் அணைக்கட்டுவோம் என்பார்கள். எனவே, அந்த கோரிக்கை தற்போது தேவையில்லாது.

கர்நாடக அரசு தொடர்ந்து ஜனநாயகத் திற்கு எதிராக செயல்படுகிறார்கள். மேகேதாட்டு விவகாரத்தில் பல அமைப் புகல் பல விதமாக வழக்குகள் தொடர வேண்டும். நான் விரைவில் தமிழக நீர் வளத் துறை அமைச்சரை சந்திக்க உள் ளேன். தமிழக மக்கள் 40 எம்.பி.க்களை எங்களுக்கு கொடுத்திருந்தால் நாங்கள் மேகேதாட்டு அணைகட்டுவதைதடுத்து நிறுத்திருப்போம்.

மேகேதாட்டு விவகாரத்தில் தமிழகத் தில் அனைத்து கட்சி கூட்டம் கூட்ட வேண்டும். பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்களை நேரில் சந்திக்க வேண் டும். காவிரிக்காக எந்த எல்லைக்கும் செல்ல நான் தயாராக இருக்கிறேன். டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவித்து நிவார ணம் வழங்க வேண்டும் என்று விவசாயி கள் வைப்பது சரியான கோரிக்கை தான். அதை அரசு செயல்படுத்த வேண்டும்.

தமிழக அரசு மேகேதாட்டு அணை கட் டுவதை தீவிரமாக தடுக்க வேண்டும். அதற்காக இளைஞர்கள் ஜல்லிக்கட்டு போராட்டம் போல சாலைக்கு வந்து போராட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் திருச்சி மாவட்ட பாமக பிரமுகர் திலீப் உட்பட பல்வேறு முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்ட னர்.

# த.வெ.க. அரசுக்கு திராவிடர் கழகம் ஆதரவா? பொதுக்குழு கூட்டத்தில் முக்கிய தீர்மானம்




சேலம், ஜூலை 5

திராவிடர் கழகத் தின் பொதுக்குழு கூட்டம் சேலத்தில் உள்ள கே.எம்.பி. திருமண மண்டபத் தில் இன்று நடை பெற்றது. கூட்டத்திற்கு, திரா விடர் கழக தலைவர் கி. வீரமணி தலைமை தாங்கி னார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட முக் கிய தீர்மானங்கள் வருமாறு:

★ மதம் மாறிய பிற்படுத்தப்பட்ட முஸ் லிம்களின் இடஒதுக்கீட்டு உரிமையை பாதுகாக்க தமிழக அரசு உரிய சட்ட நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும்.

★ தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து கேந்திரிய வித்யாலயா பள்ளி களிலும் தமிழ் மொழி கல்விக்கு உரிய முக்கியத்துவம் வழங்கி, தமிழ் ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக உரு வாக்கி நிரப்ப வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

★ நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங் களிலும் 33 சதவீதம் மகளிர் இடஒதுக் கீட்டை உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

★ சட்டமன்றங்களுக்கும், நாடாளு மன்றத்திற்கும் மக்களால் தேர்ந்தெடுக் கப்படும் பிரதிநிதிகள் கட்சி மாறிச் செல் வதை கட்டுப்படுத்த சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

★ அயோத்தி ராமர் கோவில் நன் கொடை முறைகேடு வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும்.

★ சாதிவாரி கணக்கெடுப்பை குறை யின்றி முழுமையாக நடத்திட வேண் டும்.

★ கீழடி அகழாய்வு அறிக்கையில் தேவையற்ற திருத்தம் செய்யக்கூடாது.

★ நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தை தனியார் மயமாக்கும் முயற்சியை கண் டித்து நெய்வேலியில் ஜூலை 7ந் தேதி தலைவர் கி.வீரமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

★ ஆணவப் படுகொலைகளை தடுக் கும் சட்டத்தை விரைவாக கொண்டுவர வேண்டும்.

★ புதிதாக அமைந்துள்ள முதல்அமைச்சர் ஜோசப் விஜய் தலை மையிலான ஆட்சிக்கு, தந்தை பெரியார் ஒரு கொள்கைத் தலைவர் என்று பிரகட னப்படுத்துகிறது. அது செயல்பாடுகளி லும், கொள்கை நிலைப்பாட்டிலும் எந்த அளவுக்கு நடைமுறையில் வருகிறது என்பதை பொருத்தும், எப்போதும் எந்த ஆட்சியாக வந்தாலும், அவர்களிடம் கொள்கை ரீதியாக ஆதரவு காட்ட வேண் டியவற்றை ஆதரிக்கவோ, எதிர்க்க வேண்டியவற்றை எதிர்க்கவோ, தயவு தாட்சயண்யமின்றி சுட்டிக்காட்டவோ தயங்காத இயக்கம் இது.

தி.மு.க.வுடன் திராவிடர் கழகத்திற்கு உள்ள உறவு, தாய் பிள்ளை உறவு. அந்த உறவு தொடர்ந்து இருக்கும். அதே நேரத் தில், ஆளுங்கட்சி, எதிர்கட்சிகள் யாராயி னும், நமக்கு எப்போதும் உள்ள கொள்கை பார்வையே தொடரும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திருப்பத்தூரில்
# அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் சிப்காட் கொண்டுவர முதலமைச்சரின் பார்வைக்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் : அமைச்சர் தகவல்



திருப்பத்தூர்:ஜூலை:5, திருப்பத்தூர் மாவட்டத் திற்கு வனத்துறை அமைச்சர் இரஞ்சித்குமார் மாவட்ட வளர்ச்சி குறித்த திட்ட பணிகள் குறித்தும் சம் பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், 01 பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 14 மாற்றுத்திற னாளிகளுக்கு ரூ.12.88 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வனத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள்மற்றும்வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து வனத்துறை அமைச்சர் ஆர்.வி. இரஞ்சித்குமார் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில், ஆட்சியர் கு.ரவிகுமார் சட்டமன்ற மாவட்ட உறுப்பினர்கள் டாக்டர். நா.திருப்பதி (திருப்பத்தூர்), ஆ.செ.வில்வநாதன் (ஆம்பூர்), எஸ்.எஸ்.பி.சையத் பாருக் பாஷா (வாணியம்பாடி) மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில், வனத்துறை அமைச்சர் ஆர்.வி.இரஞ்சித்குமார் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் நலன் கருதி அடிப்படை தேவைகள் தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டுமென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பு அமைச்சர்களை நியமித்து, ஆய்வுக் கூட்டம் நடத்தி, அரசு திட்டங்கள் பொதுமக்களை சென்றடைவதை உறுதி செய்ய அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான ஆட்சியில், பொதுமக்களுக்கு எந்த ஒரு குறைகளும் இருக்கக் கூடாது. குறிப்பாக குடிநீர், மின்சார வசதி, கழிவு நீர் கால்வாய், தெரு விளக்குகள் உள்ளிட்ட அடிப்படை தேவைகளையும், மண் சாலைகளை தார் சாலையாக அமைப்பது, சுடுகாட்டிற்கு பாதை அமைப்பது போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை கண்டறிந்து, அவற்றிற்கு உடனடி மற்றும் நிலையான தீர்வுகளை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

முன்னதாக, மாவட்ட அலுவலக வளாகத்தில், ஆட்சியர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.114,400/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட நியோ போல்ட்களையும், 09 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,05,000/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட சக்கரநாற்காலிகளையும். 02 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையும் (UDID) மற்றும் 01 பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீடு அட்டை என மொத்தம் 15 நபர்களுக்கு ரூ.12 இலட்சத்து 88 ஆயிரத்து 200/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வனத் துறை அமைச்சர் வழங்கினார்.

# பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்காவில் 2 அமைச்சர்கள் ஆய்வு



ஈரோடு ஜூலை 5

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் தொழிற் பூங்காவில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் கீர்த்தனா அவர்கள் கைத்தறி, துணி நூல் மற்றும் காதித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், தொழிற்பூங்காவில் நடைபெற்று வரும் தொழில்துறை வளர்ச்சிப் பணிகள், உள்கட்டமைப்புஉருவாக்கம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும், தண்ணீர் விநியோக அமைப்புகள், விரிவான சாலை வசதிகள், காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட தண்ணீர் விநியோக ஏற்பாடுகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவை குறித்து ஆய்வு நடந்தது.

மேலும் புதிய பொது சுத்திகரிப்பு நிலைய பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அமைச்சர்கள் கூறினர். பொதுமக்கள் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளை கேட்டு அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கும் படி அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். மேலும், தொழில் துறை சூழலை புரிந்து கொள்ளவும், பிராந்தியத்தின் வளர்ச்சி சாத்தியக் கூறுகளை மதிப்பிடவும் சிப்காட் தொழில் பூங்காவில் நிலம் பெற்ற நிறுவனபிரதிநிதிகள் எழுப்பிய கோரிக்கைகளுக்கு தீர்வு காணுவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, சிப்காட்டில் உள்ள தனியார் நிறுவனங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ராஜ்குமார், சிப்காட் செயற்பொறியாளர் பசுபதி, சிப்காட் திட்ட அலுவலர்சுஜாபிரியதர்ஷினி மற்றும் சிப்காட் அலுவலர்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் சிப்காட் தொழில் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து தூத்துக்குடி அலகு I& II, ஆகிய பகுதிகளை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டா ர்.உடன் துறை சார்ந்த அரசு அதிகாரிகள் உள்ளனர்

# காருண்யா பல்கலைக்கழக 33வது பட்டமளிப்பு விழா




கோவை ஜூலை:05

கோவை, காருண்யா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கல்வி நிறுவனத் தின் பல்கலைக்கழகம் 33வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத் தில் உள்ள டி.ஜி.எஸ். தினக ரன் கலையரங்கில் நடை பெற்றது.துணைவேந்தர் பேராசிரியர் எலைஜா பிள சிங் வரவேற்றார். மஹிந் திரா& மஹிந்திராலிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் வணிகப் பிரிவுத்தலைவர் மற்றும் மஹிந் திரா எலக்ட்ரிக் ஆட்டோமோட்டிவ் லிமிடெட்,சென்னை நிறுவனத்தின் நிர் வாக இயக்குநர் ஆர். வேலுசாமி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தினார்.மாணவர்கள் தன்னம்பிக் கையுடன் சவால்களை எதிர்கொண்டு, சமுதாய முன்னேற்றத்திற்கு பங்களிக் கும் தலைவர்களாக உருவாக வேண்டும் என்று வலியுறுத்தினார். கௌரவ முனை வர் பட்டத்தைப் பெற்ற அவர், கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடரும் பயணம் என்றும்,புதுமை மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் மனிதகுலத் தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் கூறினார்.

காருண்யா நிகர்நிலைப் பல்கலைக்க ழக வேந்தர் டாக்டர் பால் தினகரன் தலைமை தாங்கி தங்களின் படிப்புகளை வெற்றிகரமாக முடித்த மாணவ மாணவி யருக்கு பட்டங்களை வழங்கி,பட்டம் பெற்ற மாணவ மாணவிகளை வாழ்த்தி பேசியதாவது: உங்கள் வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் ஒரு நாள். கடின உழைப்பு, விடாமுயற்சி, ஒழுக் கம், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் பல னாக நீங்கள் பட்டங்களைப் பெறுகிறீர் கள். காருண்யா பல்கலைக்கழகத்தில் நீங்கள் தரமான கல்வியை மட்டுமல்ல, உயர்ந்த ஒழுக்க நெறிகளையும், மனித நேய பண்புகளையும் கற்றிருக்கிறீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த மகிழ்ச்சியான தருணத் தில்,பெற்றோர்களுக்கும் எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இங்கு அமர்ந்திருக்கும் ஒவ்வொரு பட்டதாரியின் வெற்றிக்குப் பின்னாலும் பெற்றோரின் தியாகம் இருக்கிறது. இந்த வெற்றி உங்களுடை யது மட்டுமல்ல உங்கள் பெற்றோர்க ளின் வெற்றியும் கூட, அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட் டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டம் பெற்ற மாணவர்கள் தங்களின் சமூக பொறுப்பின் வெளிப்பாட மாற்றுத் திறனாளிக்கு வீல்சேர்கள் மற்றும் மூன்று சக்கர ஸ்கூட்டர் வழங்கினர்.வேந்தர் விருதுகள் லெட்டிஷியா வழங்கப்பட் டது. முன்னதாக,ஆர். வேலுசாமி அவர் களின் தலைமைத்துவத்தையும்,சேவை களையும் பாராட்டி, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

# பணி நிரந்தரம் செய்யக்கோரி டாஸ்மாக் பணியாளர்கள் மீண்டும் போராட்டம்; திருச்சி கூட்டத்தில் தீர்மானம்




திருச்சி, ஜூலை 5

தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் பி. முருகானந்தம் தலைமை தாங்கினார். மாநிலத் தலை வர் மு.கு.பழனிபாரதி, மாநில பொதுச்செயலாளர் ம. கோதண்டம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு ஆலோச னைகள் வழங்கிப் பேசினர்.

இதில் மாநில பொருளாளர் சா. சுரேஷ், மாநில இணை பொதுச் செயலாளர் மே.மரகதலிங்கம், மாநில தலைமை நிலைய செயலாளர் சி. முத்துக்குமரன், மாநில துணைத் தலைவர்கள் இரா. கண் ணையன், ஜி. அருணகிரிமுருகன், கி. முருகேசன், கா. இளங்கோவன், மாநில செயலாளர்கள் வீ. கோவிந்தராஜன், கே.இராமர்பாண்டியன், ஏ. மோகன், தா. உமாபதி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் அதிகளவில் கலந்து கொண் டனர்.

தமிழக டாஸ்மாக் கடைகளில் பணிபு ரியும் 24,000 பணியாளர்களை பணி நிரந் தரம் செய்து கேரளா போன்று அரசு பணி யாளர்களுக்கு இணையான ஊதியம் இதர பணப்பயன்கள் வழங்க வேண் டும். காலி பாட்டில் வாங்க தனி முகமை ஏற்படுத்த வேண்டும்ஓ ய்வு வயதை 60 ஆக உயர்த்துவதோடு, மதுபான கூட மின்றி மதுக்கடைகள் அரசின் சொந்த கட்டிடத்தில் இயங்க வழிவகை ஏற்ப டுத்த வேண்டும். எப்எல் 2 தனியார் மதுக் கூடங்களில் உரிய அதிகாரிகளை தவிர மற்றவர்கள் ரீல்ஸ் எடுத்து சமூக வலைத ளங்களில் பதிவிட்டு அச்சுறுத்துவது போன்ற செயல்களை தடுக்க வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இதேபோல தமிழக அரசு நடத்தும் டாஸ்மாக் கடைகளிலும், டாஸ்மாக் பணியாளர்களை தாக்குவது, வன்முறை யில் ஈடுபடுவோருக்கும் இதே போல டாஸ்மாக் நிர்வாகம் வழக்கை தொடுத்து பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் 14 மாவட்டங்களில் 4 நாட்கள் தொடர் கடை அடைப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டபோது அதைத் தொடர்ந்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ் சங்கப் பிரதி நிதிகளை டாஸ்மாக் தலைமை அலுவல கத்தில் அழைத்து பேசி 30 நாட்களுக்குள் மேற்கண்ட கோரிக்கைகளை நிறை வேற்றி தருவதாக உறுதி அளித்தார். ஆனால், இதுவரை எவ்வித கோரிக்கை யும் நிறைவேறவில்லை.

ஆகவே, இதனை வலியுறுத்தி வருகிற ஏழாம் தேதி தமிழகத்தில் உள்ள 5 முது நிலை மண்டல மேலாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத் துவது எனவும், அடுத்த கட்டமாக ஜூலை 10ம் தேதியன்று தமிழகம் முழு வதும் உள்ள 38 மாவட்ட மேலாளர் அலு வலகங்களில் தொடர் காத்திருப்பு போராட்டத்தை தமிழ்நாடு அரசு டாஸ் மாக் பணியாளர் சங்கம் மற்றும் டாஸ் மாக்கில் உள்ள தோழமை சங்கங்களின் கூட்டமைப்போடு இணைந்து நடத்த வுள்ளது என தீர்மானிக்கப்பட்டது.



# ஓபிசி சமுதாயங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கும் விழா

கோவை ஜூலை:05

கோவை திருச்சி சாலை வெங்கடலட்சுமி கல்யாண மண்டபத்தில் ஓபிசி சமுதாயங்களை சேர்ந்த சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற,ஏழை மாணவர்களுக்கு சுமார் 10 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஓபிசி நிர்வாகிகள், உதவித் தொகையை வாங்கிய பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இதை அடுத்து வருகின்ற 12. 07 .2026 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நமது இயக்கம் நடத்துகின்ற ஒரு கருத்தரங்கம்” ஓபிசி மக்களின் இன்றைய நிலையும் ஜாதிவாரி கணக்கெடுப்பும் “என்றதலைப்பில்மிகப்பெரியஒருநிகழ்வுசென்னை ராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையில் உள்ள இ.என். சேஷ மகாலில் நடைபெற உள்ளது.இந்த நிகழ்வில் அகில இந்திய தலைவர்கள் சூரஜ் மண்டல் (மண்டல் கமிஷன்B.P. மண்டல் அவர்களுடைய பேரன்) அகில இந்திய ஓபிசி மாணவர்கள் சங்கத்தின் தேசிய தலைவர்,டிஆர்.கிரண்குமார்,அசோக் வரதன் ஷெட்டி ஐஏஎஸ் மற்றும் மாநில பிஜேபி த வெ க,திமுக,அதிமுக தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்று தெரிவித்தார்.

# சாலையில் நடந்து சென்ற 72 வயது முதியவரை இருசக்கர ரகனத்தில் அழைத்துச் சென்று விடுவதாக கூறி வழிப்பறியில் ஈடுபட்ட வாலிபர் கைது



கிருஷ்ணகிரி, ஜூலை 5

கிருஷ்ணகிரி மாவ ட்டம் பர்கூர் தாலுக்கா பர்கூர் பேருந்துநிலையத்திலிருந்து சின்ன பர்கூர் பகுதியில் உள்ள வீட்டிற்கு நடந்து சென்ற முதியவரை நான் உங்களைவிட்டுவிடுகிறேன் என்று கூறி அழைத்துச் சென்று அவரை தாக்கி பணம் ரூபாய் 1200 செல் போன் மற்றும் வெள்ளி அரைநான் கயிறு ஆகிய வற்றை பறித்து சென்றதாக பர்கூர் காவல் நிலையத்தில் சின்னப்பன் வயது 72 சின்ன பர்கூர் பகுதியைச் சேர்ந்தவர் புகார் அளித்ததின் பேரில் பர்கூர் காவல் ஆய் வாளர் அன்பழகன் தலைமையில் சிறப்பு தனிப்படை அமைத்து பர்கூர் காவல்துறையினர்

விசாரணை செய்ததில் மணிகண்டன் வயது 22 தகப்பனார் பெயர் வெங்கடே சன் ராமசாமி நகர் எமகல்நத்தம் பகுதி யைச் சேர்ந்த இளைஞர் கைது விசா ரணை செய்து முதியவரிடமிருந்து பறித்துச் சென்ற செல்போன் பணம் மற் றும் அரைநாள் கயிறு வழிப்பறிக்கு பயன்படுத்திய இரு சக்கர வாகனம் ஆகி யவற்றை பறிமுதல் செய்தனர் பின்னர் நீதிமன்ற காவலுக்கு தர்மபுரி மாவட்ட சிறைக்கு அனுப்பப்பட்டார் குற்றச்செயலில் ஈடுபட்ட ஒரு சில மணி நேரங்களிலே குற்றவாளியை கண்டுபி டித்ததற்கு பொதுமக்கள் பர்கூர் காவல்து றையினரை வெகுவாக பாராட்டு வரு கின்றனர்



கிருஷ்ணகிரி நகராட்சி, காந்திரோடு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் ஆதரவற்றவர்களுக்கான மன நல காப்பகம் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து மனநல காப்பகத்தில் சிகிச்சை முடிந்து நலம் பெற்ற இரண்டு நபர்களை சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். உடன் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சந்திரசேகர், மருத்துவர்கள் மரு.மது, மரு.கிருபாவதி, மரு.மலர்விழி, திட்ட ஒருங்கிணைப்பாளர் . ஜலாலுதீன் ஆகியோர் உள்ளனர்.

## தருமபுரி நகராட்சியில்
# லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் அதிரடி சோதனை கணக்கில் வராத ரூ . 50,000 பறிமுதல்




தருமபுரி ஜூலை 05

தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் நாகராஜன் தலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பெருமாள் மற்றும் காவல் துறையினர் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் திடீரென நுழைந்து உள்புறமாக கேட்டை பூட்டிக் கொண்டு சோதனையில் ஈடுபட்டனர் . இந்த சோதனை 5 மணி நேரத்திற்கு மேலாக சோதனை நடைபெற்றது. அப்போது பல்வேறு ஆவணங்கள் மற்றும் கணக்கில் வராத ரூ. 50,000 சிக்கியது. இது தொடர்பாக அந்த அலுவலகத்தில் இருந்த பணியாளர்களிடம் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தினார்கள். இதனால் தருமபுரியில் பரபரப்பு ஏற்பட்டது.

# விவேகானந்தர் 125வது நினைவு தினம் அன்னபூஜை



கன்னியாகுமரி, ஜூலை. 5

கன்னியாகுமரி விவேகா னந்தா கேந்திராவில் அன்ன பூஜைகன்னியாகுமரிஜூலை 5 சுவாமி விவேகானந்தரின் 125வது நினைவு நாளை முன் னிட்டு விவேகானந்தா கேந் திராவில் அன்னபூஜை நடந் தது.

வீரத் துறவி' என்று அனை வராலும் அழைக்கப்படும் சுவாமி விவேகானந்தர் 1902 ம் ஆண்டு ஜூலை மாதம் 4ந் தேதி மரணம் அடைந்தார். அ வ ரு டை ய 125 நினைவு நாளை முன்னிட்டு கிராம முன்னேற்ற திட்டத்தின் சார்பில் விவே கானந்தா கேந்திரா வளாகத்தில் உள்ள சபாகிரக அரங்கில் அன்னபூஜை நிகழ்ச்சி நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர்,அன்னை சார தாதேவி, விவேகானந்தர் நினைவு மண் டபத்தை நிறுவிய ஏக்நாத் ரானடே ஆகி யோரது உருவப்படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந் தது. படங்களுக்கு கேந்திர துணை தலை வர் நிவேதிதா, தளவாய்சுந்தரம் எம் எல்ஏ, கேந்திர இணை பொதுச்செயலாளர் ரேகாதவே, கேந்திர மண்டல நிர்வாக செயலாளர் ராதாநிதி ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத் தினர்.

தொடர்ந்து தென்மாவட்டங்களில் உள்ள விவேகானந்தா கேந்திர தொண் டர்கள் பொதுமக்களிடம் சேகரித்த சுமார் 10 டன் அரிசியை மலைபோல் குவித்து வைத்து அதன் மேல் அன்னபூ ரணி விக்கிரகத்தை ஆவாஹனம் செய்து அன்னபூஜை நடந்தது. அப்போது ஆதி சங்கரரின் அன்னபூர்ணா ஸ்தோத்திரம், ஸ்ரீமத் பகவத்கீதையில் உள்ள விஸ்வ ரூப தரிசன ஸ்லோகங்கள் ஆகிய வழிபா டுகள் நடந்தது. பூஜைக்கு பின்னர் அன் னபூரணி தேவிக்கு மங்கள ஆரத்தி எடு க்கப்பட்டது. தொடர்ந்து அனைவருக் கும் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த கிராம முன்னேற்ற தொண்டர் கள், பள்ளி மாணவர்கள், கேந்திர நிர்வா கிகள் கலந்து கொண்டனர். கேந்திர நிர்வாக அதிகாரி அனந்த ஸ்ரீ பத் மநாபன் நன்றி கூறினார்.

### பாலக்கோடு சுங்கசாவடியில்

# ரூ.3 லட்சம் மதிப்பிலான தடைசெய்யப்பட்ட குட்கா பறிமுதல் டிரைவர் கைது



தருமபுரி ஜூலை 05

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு புதிய தேசிய நெடுஞ் சாலை வழியாக குட்கா பொருட்கள் கடத்தி செல்வதாக பாலக்கோடு காவல்துறைனருக்கு ரகசிய தகவல் கிடைத் தது. பாலக்கோடு இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியன் தலை மையில் சுங்கசாவடி பகுதியில் காவல்துறையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பெங் களூரில் இருந்து மதுரை நோக்கி சென்றுகொண்டிருந்த சந்தேகத்திற்கிட மான வந்த சொகுசு காரை காவல்துறை யினர் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். சோத னையில் 20 க்கும் மேற்பட்ட மூட்டைகளில் சுமார் 250 கிலோ அளவிற்கு ரூ. 3 லட்சம் மதிப்பிலான தமிழக அர சால் தடை செய்யப்பட்டுள்ள குட்கா பொருட்கள் கடத்தி வந்தது தெரிய வந்தது. குட்காவுடன்,சுமார் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள சொகுசு காரை பறிமுதல் செய்த காவல்துறை யினர் இது குறித்து வழக்கு பதிவு செய்து மதுரை உசிலம் பட்டியை சேர்ந்த டிரைவர் ‘ஏத்துராமன்(வயது31) என்ப வரை காவல்துறையினர் கைது செய்தனர்.



### வடசேரி உழவர் சந்தை வளாகத்தில்

# இயற்கை வேளாண் அங்காடி கலெக்டர் துவக்கி வைத்தார்


நாகர்கோவில், ஜூலை. 5

நாகர்கோவில் வடசேரி உழவர் சந்தை வளாகத்தில் இயற்கை வேளாண் அங்காடியினை மாவட்ட ஆட்சித்த லைவர் மு.பிரதாப் நேற்று 4ம் தேதி துவக்கி வைத்து, பார்வையிட்டு கூறியதாவது:

தமிழக அரசு சார்பில் விவசாயிகளின் விளைபொரு ட் களைச்சந்தைப்படுத்தவும்,இயற்கைசார்ந்தவிவசாயத்தை ஊக்கப்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

அதன்ஒருபகுதியாக, ஒவ்வொரு மாதமும் முதல் சனிக் கிழமைகளில் வடசேரி உழவர் சந்தையில் 'ஆர்கானிக் ஃபார்ம்' எனப்படும் இயற்கை வேளாண் அங்காடி செயல் படும். நேற்று தொடங்கப்பட்ட இயற்கை அங்காடியில் இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், பழங்கள், தேன், தேங்காய், தூய மல்லி, கட்டி சம்பா உள்ளிட்ட பாரம்பரிய அரிசி வகைகள், இயற்கை உரங்கள் மண்புழு உரம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், மட்டி பழம் உள் ளிட்ட வாழைப்பழ வகைகள், பலா பழங்கள் மேலும் கண்களைகவரும்பூச்செடிகள்ஆகியவைவிற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. சுமார் 80 விவசாயிகள் தங்கள் இயற்கை விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளனர். இது ஒரு தொடக்கம் மட்டுமே வரும் நாட் களில் இந்தச் சந்தையை இன்னும் சிறப்பாக மேம்படுத்தி, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்ட மிட்டுள்ளோம்.

இது விவசாயிகளுக்கு ஆரோக்கியமான போட்டியை உருவாக்கி, அவர்களின் தயாரிப்புகளை மேம்படுத்த உத வும். மேலும், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 'மாடித்தோட்டங்களை' அமைப்பதை ஊக்குவித்து வருகி றோம். இது குப்பைக் கழிவுகளைக் குறைக்கவும் உதவும். நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் மாடித்தோட் டங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும். என கூறினார். நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண் துறை இணை இயக்குனர் வாணி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹு முகம்மது நசீர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை கீதா, விவசாய பிரதி நிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# பேச்சிப்பாறைஅருகே பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட படகை இயக்க கோரிக்கை

பேச்சிப்பாறை, ஜூலை 5

பேச்சிப்பாறை அருகே தச்சமலை, பின்முட்டுதேரி, களப்பாறை ஆகிய மூன்று மலை கிராமத்தில் இருந்து பேச் சிப்பாறை அரசு பள்ளியில் படித்து வருகின்றனர். மாண வர்கள் பள்ளிக்கு செல்ல வேண்டுமென்றால் அணையை கடந்து படகில் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையை தவிர்க்க பேச்சிப்பாறை ஊராட்சி சார்பாக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் படகு ஒன்று வழங்கப்பட் டது. ஆனால் அந்த படகு மூலம் சில நாட்கள் மட்டும் பள்ளி செல்ல முடிந்துள்ளது. தற்போது பல மாதங்களாக அந்த படகு இயக்கப்படாமல் நிறுத்திவிடப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் பள்ளிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஊராட்சி நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் படி தச்சமலை ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### நல்லம்பள்ளி அருகே

# அரசிடம் இலவச வீட்டுமனை பட்டா பெற்ற பயனாளிகள் இடத்தை ஆக்கிரமித்து கொண்டு வீடு கட்ட விடாமல் தடுக்கும் கும்பல்: நடவடிக்கை எடுக்ககோரி ஆட்சியருக்கு கோரிக்கை.



தருமபுரி ஜூலை 05

தருமபுரி மாவட்டத்தில் வீடற்ற மற்றும் வாடகை வீட்டில் வசித்து வரும் பயனாளிகள் 110 பேரை தேர்வு செய்து, நல்லம்ப ள்ளி தாலுகா பெரியவீ ட்டுகொட்டாய் கிராமத்தி ல், கடந்த இரண்டு ஆண்டு களுக்கு முன்பு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கி, இடம் ஒது க்கியது. பயனாளிகளுக்கு வழங்க ப்ப ட்ட அந்த இலவச வீட்டு மனை இட த்தில்,வீடுகட்டபயனாளிகள்சென்றால், அதே பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்ப த்தினர் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துக் கொண்டு, இது எங்கள் நிலம் எனக்கூறி, வீடுகட்ட விடாமல் பயனாளிகளை தடுத்து வருகின்றனர். மேலும் கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதனால் அரசு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கியும், பயனாளிகள் இதுவரை வீடுகட்ட முடியாமல் தவித்து வரு கின்றனர். இதேபோல் நேற்றும் சம்மந்தப்பட்டபெரியவீட்டுகொட்டாய் கிராமத்தில், அரசு வழங்கிய இடத்தில் வீடு கட்டச் சென்ற 4 பயனாளிகளை, அதே ஊரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர், அவர்களுக்கு வழங்கப்பட்ட இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, வீடுகட்ட விடாமல் தடுத்தும், பயனாளிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக கூற ப்படுகிறது. தருமபுரி மாவட்ட நிர்வாகம் உரிய கவனம் செலுத்தி, இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கி உள்ள இடத்தில், பயனாளிகளை வீடுகட்ட விடாமல் தடுக்கும் கும்பல் மீது நடவடிக்கைஎடுப்பதுடன்,பயனாளிகள் வீடு கட்டிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அரசிடம் இலவச வீட்டு மனை பட்டாக்கள் பெற்ற பயனாளிகள் தரப்பில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தூத்துக்குடி மாநகராட்சியில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை




தூத்துக்குடி, ஜூலை 5

தமிழகம் முழுவதும் மாந கராட்சி, நகராட்சி உள்ளி ட்ட 41 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை நடத்திய அதிரடி சோதனையை பார திய ஜனதா கட்சியின் தூத் துக்குடி தெற்கு மாவட்ட தலைவர் சித்ராங்கதன் வர வேற்றுள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகம் முழுவதும் நடை பெற்ற லஞ்ச ஒழிப்புத்து றையின் அதிரடி சோதனையில் கணக் கில் வராத பணம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது, அரசுத் துறைக ளில் நிலவும் நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் ஊழல் குறித்த மக்களின் சந்தே கங்களுக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

குறிப்பாக, கைப்பற்றப்பட்ட தொகை யில் தூத்துக்குடி மாநகராட்சி முதலிடத் தில் இடம்பெற்றிருப்பது மிகவும் அதிர்ச் சியளிக்கிறது. தூத்துக்குடி மாநகராட்சியில் பொதுமக்கள் எந்த வொரு நிர்வாக சேவையையும் பெறச் சென்றாலும், லஞ்சம் கொடுக்காமல் பணிகள் நடைபெறுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள்நீண்டகாலமாகஇருந்து வருகின்றன.

மேலும், தூத்துக்குடி மாநகராட்சியில் நிலவி வரும் பல்வேறு டெண்டர் முறை யீடுகளை பாரதிய ஜனதா கட்சி சார்பாக கண்டித்து உயர் நீதிமன்றம் மூலமாக வழக்குகள் தொடுத்தும் மீண்டும் அதே நிலை தொடர்ந்து நிலவி வருவது குறிப் பிடத்தக்கது. மக்களை அலைக்கழிக்கும் நிர்வாக அலட்சியம், அடிப்படை வசதிகளில் குறைபாடுகள் மற்றும் பல்வேறு சீர்கேடு கள் குறித்து தொடர்ந்து புகார்கள் எழுந்து வருகின்றன. இந்த சூழலில், லஞ்ச ஒழிப்புத்துறை மேற்கொண்டுள்ள சோதனை மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இதன் மூலம் தூத்துக்குடி மாநகராட்சி யில் நடைபெற்று வந்ததாகக் கூறப்படும் நிர்வாக சீர்கேடுகள் மற்றும் முறைகேடு கள் பொதுமக்களின் கவனத்திற்கு வந் துள்ளன. இதேபோல் மாநகராட்சி, நகராட்சி மட் டுமின்றி, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத் துறைகளிலும் லஞ்ச ஒழிப்புத் துறை தொடர்ந்து திடீர் சோதனைகளை நடத்த வேண்டும். ஊழலில் ஈடுபடுப வர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, மக்கள் நலனைக் காக்கும் நடவடிக்கைகள் தீவிரப்ப டுத் தப்பட வேண்டும்.

வெளிப்படையான, ஊழலற்ற மற்றும் பொறுப்புமிக்க நிர்வாகத்தை உருவாக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் தெரிவித் துள்ளார்.

# திருப்பூரில் பின்னலாடை சரக்குகளை வாங்கிக் கொண்டு நாலு கோடியே 93 லட்சம் ரூபாய் மோசடி

### பாதிக்கப்பட்டவர் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் பணத்தை மீட்டுத் தரக் கூறி மனு



திருப்பூர் ஜூலை:05

திருப்பூர் சேர்ந்த பாண்டிச்செல்வி இவர் மன்னரைப் பகுதியில் கடந்த 7 வருடங்களாக பின்னலாடை ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வருகிறார். இந்நிலை யில் பாண்டி செல்வி திருப்பூரில் தனது நிறுவனத்தில் தயாரிக்கும் பின்னலாடை ரகங்களை மும்பையில் உள்ள., ( GROWY OO யோ ) நிறுவனத்தை சேர்ந்த சுபின் மித்ரா மற்றும் பிரதீப் திவாரி ஆகிய இருவருக்கும் அனுப்பி வந்துள்ளனர். கடந்த ஒரு வருடங்களாக பாண்டிச்சேரி அனுப்பி வந்த பின்னலாடை சரக்குக ளுக்கு பணம் செலுத்தி வந்தவர்கள். அதன் பின் பணத்தை அணைக்காமல் இரண்டு மாதம்., மூன்று மாதம் என்று காலம் கடத்தி வந்தவர்கள் , தற்போது நாலு கோடியே 93 லட்சம் ரூபாய்க்கான பின்னலாடை சரக்குகளை வாங்கிக்கொண்டு பணத்தை கொடுக்கா மல் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இழுத்தடித்து வந்துள்ளனர் , தற்போது பணத்தை தர முடியாது என் றும் முடிந்தால் நீதிமன்றத்தில் வழக்கை தொடர்ந்து கொள் என்று கூறியுள்ளார் இதனால் மனமு டைந்த பாண்டிச் செல்வி திருப்பூர் மாந கர காவல் ஆணையர் அலுவலகத்தை முற் றுகையிட்டவர், தனக்கு பணத்தை தரா மல் மோசடியில் ஈடு பட்டு வரும் சுபின் மித்ரா மற்றும் பிரதீப் திவாரி ஆகிய இருவரிடமிருந்து பணத்தை மீட்டு தர வலியுறுத்தியும் அதேபோல், திருப்பூரில் உள்ள பல்வேறு பின்னலாடை நிறுவன உரிமையாளர்களை இதே போல் இவர் கள் இருவரும் ஏமாற்றி உள்ளதாகவும்., அவர்கள் வெளியில் சொன்னால் தங்க ளது பின்னலாடை நிறுவனங்களின் பெயர் கெட்டுவிடும் என்ற காரணத்தி னால் அவர்கள் புகார் அளிக்க வராமல் இருப்பதாக தெரிவித்தவர், காவல்துறை யும் தமிழக அரசும் இந்த பணத்தை மீட்டு தராவிட்டால் தற்கொலை செய் வது தவிர வேறு வழியில்லை என தெரி வித்தார்.



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் ஆவின் ஐஸ்கிரீம் ஆலையில் ஐஸ்கிரீம் தயாரிப்பு, தரப் பரிசோதனை மற்றும் சுகாதார நடைமுறைகள் உள்ளிட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# பிரசாந்த் மருத்துவமனையி டாக்டர் ஆறுமுகம் 1000+ ரோபோடிக் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை




சென்னை, ஜூலை 05,

வேளச்சேரி பிரசாந்த் மருத்துவமனையின் எலும் பியல் நிபுணர் டாக்டர் எஸ். ஆறுமுகம் தென்னிந்தியா விலேயே 1000க்கும் மேற்ப பட்ட ரோபோட்டிக் முழங் கால் மாற்று அறுவை சிகிச்சை களை செய்து சாதனை படைத்துள்ளார். பத்மஸ்ரீ டாக்டர் மயில்வாக னன் நடராஜன் டாக்டர் ஆறுமுகத்திற்கு இந்தக் கௌரவத்தை வழங்கினார். இதற்கான பாராட்டு விழா வில்சிறப்புவிருந்தினராகநடிகைராதிகா சரத்குமார் கலந்துகொண்டார்.

மேலும், விழாவில் பிரசாந்த் மருத்துவ மனைகள் குழுமத்தின் தலைவர் டாக்டர் சி. கீதா ஹரிப்ரியா, நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜி. கோபாலசாமி, இயக்குநர் கள் டாக்டர் பிரசாந்த் கிருஷ்ணா, டாக்டர் சம்ஹிதா மோதூரி மற்றும் பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச் சாதனையை தொடர்ந்து பிர சாந்த் மருத்துவமனை இரண்டாவது 4ம் தலைமுறை வேலிஸ்ட் ('VELYST) ரோபோட்டிக் கருவியை அறிமுகப்படுத் தியது.

" வேலிஸ்ட் " பிரசாந்த் மருத்துவம னையின் ரோபோட்டிக் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் கடந்த 2023ம் ஆண்டு பத்மஸ்ரீ டாக்டர் மயில்வாகனன் நடராஜன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அதன்பின், மேம்பட்ட 4ம் தலை முறை ரோபோட்டிக் கருவி" அறிமுகப்ப டுத்தப்பட்டதன் மூலம் இத்திட்டம் மேலும் வலிமையடைந்தது. இத்திட்டம் தொடங்கப்பட்ட 3 ஆண்டு களில், டாக்டர் எஸ். ஆறுமுகம் 1,000 க்கும் மேற்பட்ட ரோபோட்டிக் முழங் கால் மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளார்.

இச்சாதனை குறித்து தமிழ்நாடு டாக் டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், மூத்த எலும்பியல் நிபுணருமான பத்மஸ்ரீ டாக்டர் மயில்வாகனன் நடராஜன் பேசு கையில், "1,000 ரோபோட்டிக் முழங் கால் மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்திருப்பது சாதாரண சாதனையல்ல. இதற்கு மிகப்பெரிய அர்ப்பணிப்பு, துல்லியம், அனுபவம் மற்றும் நோயாளிகளின் நலனை மேம்ப டுத்துவதற்கான வலுவான ஈடுபாடு ஆகி யவை தேவை. டாக்டர் ஆறுமுகம் அவர் களின் இச்சாதனை உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இது அவரது அறுவை சிகிச்சை நிபுணத்துவத்தையும், மூட்டு மாற்று சிகிச்சையில் நவீன தொழில்நுட் பங்களைப் பயன்படுத்தும் பிரசாந்த் மருத்துவமனையின் தொலைநோக்குப் பார்வையையும் காட்டுகிறது. தென்னிந் தியாவின் எலும்பியல் மருத்துவத் துறை யில் இது ஒரு மிக முக்கியமான முன் னேற்றமாகும்." என்றார்.

மேலும் ராதிகா சரத்குமார் பேசுகை யில், "நாம் சாதாரணமாக நடந்து செல் வதை ஒரு பெரிய விஷயமாக நினைப்ப தில்லை.ஆனால், அது ஒரு சவாலாக மாறும் போதுதான் அதன் அருமை நமக் குத் தெரிகிறது. நோயாளிகள் மீண்டும் தன்னம்பிக்கையுடன் நடப்பதைப் பார்ப் பது, ஒரு சிறந்த மருத்துவ சிகிச்சை எத்த கைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. நவீன சிகிச் சைகளைக் கொண்டு வந்து, மக்கள் மீண் டும் சுறுசுறுப்பான வாழ்க்கைக்குத் திரும்ப உதவுவதில் பிரசாந்த் மருத்துவ மனை செய்து வரும் பணி உண்மையி லேயே பாராட்டுக்குரியது. இந்த விழா வில் கலந்துகொள்வதிலும், இங்குள்ள ஒவ்வொரு நோயாளியின் உடல் வலி மையையும் நேர்மறையான எண்ணத் தையும் நேரில் காண்பதிலும் நான் மிக வும் மகிழ்ச்சியடைகிறேன்," என்றார்.

# தேசிய மக்கள் கட்சியின் மாநில தலைவர் ஜி.சீனிவாசன் பிறந்தநாள் விழா: கிருஷ்ணகிரியில் கோலாகல கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி, ஜூலை 5

தேசிய மக்கள் கட்சியின் மாநில தலைவர் ஜி.சீனிவா சனின் 50வது பிறந்தநாள் விழா நேற்று கிருஷ்ணகிரியில் தேசிய மக் கள் கட்சியின் மாவட்ட தலைவர் டாக்டர்.சந்திர மோகன் தலைமையில் கோலாகலமாக கொண்டா டப்பட்டது. இந்த பிறந்த நாள் விழா நிகழ்ச்சிக்கு மாநில தலைவர் ஜி.சீனிவா சன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.சிறப்பாக நடைபெற்ற இந்த பிறந்தநாள்

விழாவின், முதல் நிகழ்ச்சியாக கிருஷ் ணகிரி ராசு வீதியில் உள்ள முதியோர் இல்லத்தில், ஆதரவற்ற முதியோர்களுக்கு காலை உணவு பரிமா றப்பட்டது. அங்கிருந்த பிஷப் டேனி யல் சக்கரவர்த்தி இயேசுவின் பைபிளில் சில வாசகங்களை வாசித்து சிறப்புரையாற்றி மாநிலத் தலைவரை வாழ்த்தினார். பின்னர் அங்கு கூடியிருந்த பழங்குடியினர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது. இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரியில் மிகவும் பிர சித்தி பெற்ற காட்டுவீர ஆஞ்சநேயர் கோயிலில் சிறப்பு அபிஷேகத்துடன் பூஜைகளுடன் அபிஷேகங்களும், ஆரா தனைகளும்செய்துபிறந்தநாள்விழாவை தேசிய மக்கள் கட்சியை சேர்ந்த கிருஷ் ணகிரி நிர்வாகிகள் கொண்டாடினார் கள். இறுதியாக மாநிலத் தலைவர் சீனி வாசன் விழா ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித் துக் கொண்டார். இந்த பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில், தேசிய மக்கள் கட்சியின் விவசாய அணி மாநில பொதுச் செயலா ளர் எஸ்.சரவணன், மாவட்டத் துணைத் தலைவர் பத்மா, திமுக கிளைச் செயலா ளர் அண்ணாதுரை, தேசிய மக்கள் கட்சி இளைஞர் அணி நகர தலைவர் அப்சல், ஆகியோர் கலந்து கொண்ட னர்.

# வேலூரில் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை ஊழியர் சங்க 1 நாள் உண்ணாவிரத போராட்டம்



வேலூர், ஜூலை 05

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு உள் ளாட்சி நிதி தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கை துறை ஆய்வாளர் மன் றம் சார்பாக தமிழக நிதி அமைச்சரின் உத்தரவைமதிக்காததலைமைதணிக்கை இயக்குனர் (ம) சிறப்பு இயக்குனரை கண்டித்தும் தணிக்கையாளர்களின் 13 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை ஊழியர் சங்க மாநில தலைவர் ஆ.பாபு தலைமைதாங்க, மாநிலஅமைப்புசெய லாளர் கோவிந்தராஜ் அனைவரையும் வரவேற்று பேசினார். தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில பொதுச்செய லாளர் வ.மாரிமுத்து துவக்கி வைத்து பேச மாநிலத் தலைவர் வெ.மகேந்திர குமார்போராட்டத்தின்கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். மாநில பொருளா ளர் திலகன் நிறைவுறையாற்றி பேசி னார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக நிதி அமைச்சர் உத்தரவுக்கு மாறாக ஊழியர் களை தொலைதூர தணிக்கை பணிக்கு அனுப்புவதை கைவிட வேண்டும். குறிப்பாக பெண் ஊழியர்களை 100 கிலோ மீட்டருக்கு மேல் தாண்டி தணிக்கை பணிக்கு அனுப்புவதை கைவிட வேண்டும்.

சொந்த காரண விடுப்பு மற்றும் மருத் துவ விடுப்புகளுக்கு அனுமதி தர வேண் டும். மாநில அரசு தணிக்கை துறையில் உள்ள 6300 தணிக்கை காலிபணியிடங் களை நிரப்ப வேண்டும்.

பேரூராட்சிகளில்தணிக்கைமுறையை தனியார் மையமாக்கும் முயற்சியை கைவிட வேண்டும். பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளில் குற்ற குறிப்பா ணையை வழங்குவதை கைவிட வேண் டும்.

புதிதாக உருவாக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களான திருப்பத்தூர் ராணிப் பேட்டை கள்ளக்குறிச்சி செங்கல்பட்டு மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய மாவட்ட அளவிலான தணிக்கை பணிக் கான திட்டங்களை வகுக்க வேண்டும் உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.



## சட்டவிரோத விற்பனைக்காக கஞ்சாவை காரில் கடத்தி வந்த 2 நபர்கள் கைது; 13 கிலோ கஞ்சா மற்றும் கார் பறிமுதல்

தூத்துக்குடி, ஜூலை 5

தென்பாகம் காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தென்பாகம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் முகில் அரசன் மற்றும் போலீசார் நேற்று தூத்துக்குடி FCI ரவுண்டானா பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட போது, அவ்வழியாக வந்த காரை மடக்கி பிடித்து சோதனை செய்ததில், அதில் திருநெல்வேலி பாளையங்கோட்டையைச்சேர்ந்தராஜாமகன்வள்ளிதுரை (எ) சுஜித் (26) மற்றும் தூத்துக்குடி அழகேசபுரம் பகுதியை சேர்ந்த முத்துமாணிக்கம் மகன் செல்வராஜ் (எ) காடை செல்வராஜ் (24) ஆகியோர் என்பதும், அவர்கள் சட்டவிரோத விற்பனைக்காக காரில் கஞ்சா கடத்தி வந்ததும் தெரிய வந்தையடுத்து 2 நபர்களையும் கைது செய்து அவர்களிடமிருந்து 13 கிலோ கஞ்சா மற்றும் காரையும் பறிமுதல் செய்து, வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச அறிவியல் மாநாடுகளில் ஈரோடு கொங்கு இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சாதனை



ஈரோடு ஜூலை 5

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கேரளா பிரிவு இந்திய இயற்கை மற்றும் யோகா மருத்துவ பட்டதாரிகள் சங்கம் சார்பில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் போஸ்டர் பிரசென்டேசன் பிரிவில் டாக்டர் பிரணவ், விவேகா, ஜீவஹரிணி விக்னேஷ் டாக்டர் நூரி பேகம் மற்றும் நேஹா ஆகியோர் பாராட்டுப் பரிசைப் பெற்றனர்.

\மேலும் அண்மையில் சென்னை தனியார் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச ஒருங்கிணைந்த மருத்துவ அறிவியல் கருத்தரங்கில் ஈரோடு கொங்கு இயற்கை மருத்துவ மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி மாணவி ரத்னமால் ஆய்வுக் கட்டுரையை வழங்கி மூன்றாம் பரிசு வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

அதைத் தொடர்ந்து அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி நடத்திய யோகா போட்டிகளில் பல்வேறு பிரிவுகளில் மாணவர்கள் பங்கு பெற்று 10ற்கும் மேற்பட்ட பரிசுகளை வென்றனர். இச்சாதனைகளைப் பாராட்டி, கல்லூரி தாளாளர் கார்த்திகேயன், முதல்வர் டாக்டர் பிரதாப் சிங், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் விருது பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்து, எதிர்கால கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

### கோதையாற்றில்

## படகு சவாரி சென்ற பேராசிரியையிடம் அத்துமீறல் ; 3 வாலிபர்கள் மீது வழக்கு

நாகர்கோவில், ஜூலை, 5

கருங்கல் அருகே உள்ள பாலப்பள்ளம் பகுதியை சேர்ந்த பேராசிரியை ஒருவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தனது பெற்றோர் மற்றும் 5 வயது மகளுடன் கடையாலுமூடு பேரூராட்சிக்கு உட்பட்ட கோதையத்தில் உள்ள படகு துறைக்கு சுற்றுலா சென்று இருந்தார். அங்கிருந்த மிதி படகுமூலம் பேராசிரியை, அவரது குழந்தை, பெற்றோர் சேர்ந்து ஆற்றின் அழகை ரசிக்க சென்றனர். இவர்கள் ஆற்றின் நடுப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, மற்றொரு படகில் வந்தவர்கள் பேராசிரியை சென்ற மிதி படகை வழிமறித்து, அவர் மீது தண்ணீரை தளித்து ஆபாசமாக பேசி மிரட்டி, மானபங்க படுத்தியதாக கூறப்படுகிறது.

இது குறித்து கரை திரும்பியதும் சம்பந்தப்பட்டவர்களிடம் புகார் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிகிறது. இதை அடுத்து மதுரை உயர்நீதிமன்ற கிளையில் பேராசிரியை புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில் சம்பந்தப்பட்ட எல்லைக்குட்பட்ட போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த நீதிமன்ற உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் பேராசிரியை புகாரின் பேரில் திற்பரப்பு பகுதியை சேர்ந்த பிரபு (36), டார்வின் பிரைட், ராபின் ஆகிய 3 பேர் மீது கடையாலுமூடு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.



தேனி மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதித்தேர்வு நடைபெறுவதையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், ஆசிரியர் தகுதித்தேர்வு நடைபெறும் மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## குமரி மாவட்டத்தில் ஆசிரியர் தகுதி தேர்வு தாள் 2 22 தேர்வு மையங்களில் நடைபெறுகிறது

நாகர்கோவில், ஜூலை. 5

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதி தேர்வுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்றும், ம் நடைபெறுகிறது. இத்தேர்வினை மாவட்ட முழுவதும் இருந்து மொத்தம் 7 ஆயிரத்து 338 தேர்வர்கள் எழுத உள்ளனர். ஆசிரியர் தகுதி தேர்வு தாள் 1 நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதற்காக மாவட்டத்தில் 5தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வை நேற்று 1369 பேர் எழுத நுழைவு சீட்டுகள் வழங்கப்பட்டன. இதில் 25 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவார்கள். இவர்களில் 3 பேருக்கு சொல்வதைக் கேட்டு எழுதவர்கள் நியமிக்கப்பட்டனர்.

நாகர்கோவில் ஜோசப் கான்வென்டில் 253, லிட்டில் பிளவர் பள்ளியில் 285. கார்மல் பள்ளி, நாராயணகுரு மெட்ரிக் பள்ளி ஆகிவற்றில் தலா 300, வல்லன் குமார விளை பள்ளியில் 201 பேரும் தேர்வு எழுதினார். தேர்வை சிறப்பாக நடப்பதற்காக மாவட்ட கலெக்டர் தலைமையில் மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

இந்த குழுவில் மாவட்ட வருவாய் ஆய்வாளர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஆர்டிஓ மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். மேலும் தேர்வு மையங்களில் முறைகேடுகளை தவிர்க்கவும் தேர்வுகள் தடை இன்றி தேர்வு எழுதவும் பலத்த போலீஸ் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டன.

5 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர் தகுதி தேர்வு தாள் 2 நடைபெறுகிறது. இதற்காக அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிஎஸ்ஐ மெட்ரிக் பள்ளி, டிவிடி மேல்நிலைப்பள்ளி, இவான்ஸ் பள்ளி, தோவாளை அரசு மேல்நிலைப்பள்ளி உட்பட 22 தேர்வு மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இன்றைய தேர்வை 5 ஆயிரத்து 969 பேர் எழுத உள்ளனர். இதில் 66 பேர் மாற்றுத் திறனாளிகள் ஆவார். இவற்றில் 8 பேருக்கு தேர்வு எழுத உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடங்களுக்கு இந்த தேர்வு நடைபெறுகிறது.

## ஓடும் பஸ்ஸில் பெண்ணிடம் 5 பவுன் நகை பறிப்பு

நாகர்கோவில், ஜூலை. 5

நாகர்கோவில் அடுத்த எறும்புக்காடு பகுதியை சேர்ந்தவர் ஜார்ஜ் மனைவி இவரி ஸ்டெர்லின் (63). இவர் வழக்கம்பாறை பகுதியில் உள்ள தேவாலயம் சென்று பிரார்த்தனை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்புவதற்காக வடசேரி செல்லும் பஸ்ஸில் ஏறினார். பஸ் நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பு வந்ததும் அவர் அங்கு இறங்கினார். அப்போ தனது கழுத்தில் கிடந்த 5 பவுன் செயின் மாயமானதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். அதனை யாரோ பஸ் கூட்டத்தை பயன்படுத்தி திருடியது தெரிய வந்தது.

இது குறித்து இவரி ஸ்டெர்லின் கோட்டாறு போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் டிப்டாப் உடையில் வந்த பெண்கள் இந்த திருட்டில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. அதன் பேரில் சம்பவ பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை கைப்பற்றி போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாகவே டிப் டாப் உடையில் வரும் பெண்கள் ஓடும் பஸ்ஸில் கைவரிசை காட்டும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஏற்கனவே களியக்காவிளை, குளச்சல் பகுதிகளில் பஸ்களில் பயணம் செய்த பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் நகை பறிக்கப்பட்ட நிலையில், தற்போது இந்த சம்பவம் நடைபெற்று உள்ளது.

போலீசார் நடத்திய விசாரணையில் இந்த கும்பல் பஸ் பயணங்களில் திருடி விட்டு உடனடியாக வெளியூர்களுக்கு தப்பி செல்வது விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர்களைப் பிடிக்க போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

### விளாத்திகுளத்தில்

## அண்ணாமலை We the Leaders அமைப்பின் உறுப்பினர் சேர்க்கை முகாம்




விளாத்திகுளம் ஜூலை05.

தமிழக பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை, கடந்த சில நாட்களுக்கு முன்பு தான் பாரதிய ஜனதா கட்சியில் இருந்து விலவதாக அறிவித்து, தான் புதிய கட்சி ஆரம்பிப்பதாக தெரிவித்த நிலையில், We The Leders இன்னும் அமைப்பை அறிமுகப்படுத்தினார், அறிமுகப்படுத்திய ஒரே நாளில் மட்டும் இணையதளம் வாயிலாக சுமார் 6 லட்சம் பேர் அண்ணாமலையின் புதிய இயக்கத்தில் இணைந்தனர், அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள பாஜக உள்ளிட்ட பல்வேறு கட்சியில் இருந்து அரசியலமைப்பினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலர் அண்ணாமலையின் புதிய இயக்கத்தில் இணைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தனியார் திருமண மண்டபத்தில் அண்ணாமலை We The Leaaders அமைப்பின் முகாம் கடம்பூர் அருண் ராஜா தலைமையில் நடைபெற்ற இந்த உறுப்பினர் சேர்க்கை முகாமில் விளாத்திகுளம் மத்திய பகுதியை சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்டோர் அண்ணாமலை இயக்கத்தின் உறுப்பினர் வடிவத்தை நிரப்பி தங்களை உறுப்பினராக இணைத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து முகாமில் போதைப் பொருள் விழிப்புணர்வு சம்பந்தமாக அனைவராலும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சொக்கலிங்கபுரம் காட்டு ராஜா, துரைச்சாமிபுரம் வெங்கடேஷ், வழக்கறிஞர் பொன்ராஜ், கோவில்பட்டி சீனிவாசன், விளாத்திகுளம் கார்த்தி, விளாத்திகுளம் மற்றும் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி WeThe Leaders அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் திரளாக கலந்து கொண்டனர்.



## புதுப்பிக்கப்பட்ட பாரதியார் வீடு கிரிக்கெட் ரப்பர் பந்து அடித்ததில் சேதம்

### சீரமைக்க அதிமுகவினர் கோரிக்கை

எட்டயபுரம் ஜூலை 05

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்திய சுதந்திரத்திற்காக, தனது புரட்சிகர பாடல்கள் மற்றும் கவிதையால் விடுதலை எழுச்சியை ஏற்படுத்திய மகாகவி பாரதியாரின் பிறந்த வீடு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் நினைவு இல்லமாக உள்ளது, இங்கு பாரதியாரின் நினைவு மற்றும் பிறந்த தினம் அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டு வருகிறது, அதேபோல் இந்தியா முழுவதும் உள்ள பாரதியாரின் கவிதை ரசிகர்கள், எழுத்தாளர்கள், பள்ள,கல்லூரி மாணவ மாணவிகள் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர், பாரதியாரின் நினைவு இல்லத்தை பார்வையிட்டு அவர் பயன்படுத்திய சாதனங்கள் உள்ளிட்டவைகளை பார்வையிட்டு சென்று வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு பாரதியாரின் நினைவு இல்ல வீடு சேதம் அடைந்தது, இதனைத் தொடர்ந்து அதிமுக உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் போராட்டங்கள் மற்றும் கண்டன குரல்களை எழுப்பினர். அதனைத் தொடர்ந்து அப்போது இருந்த திமுக அரசு 1 கோடியே 53 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, பாரதியாரின் நினைவு இல்ல வீடு மறு சீரமைப்பு பணியை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி, முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் ஆகியோர் இல்ல சீரமைப்பு பணியை ஆய்வு செய்தனர். தற்போது சீரமைப்பு பணி முடிவடைந்த நிலையில்,சில நாட்களுக்கு முன்பு அதே தெருவில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அடித்த ரப்பர் பந்து தற்போது சீரமைக்கப்பட்ட பாரதியாரின் நினைவு இல்ல வீட்டில் அடித்ததில் வீட்டின் ஒரு பகுதி சேதம் அடைந்தது. இந்நிலையில் மக்கள் வரிப்பணத்தில் பாரதியாரின் நினைவு இல்ல மறுசீரமைப்பு பணிக்காக 1 கோடி 53 லட்சம் ரூபாய் பணத்தில் முறையாக இல்லத்தை சீரமைக்காமல், மக்கள் பணத்தை பழைய திமுக அரசு முறைகேடு செய்ததாகவும், எனவே தற்போது உள்ள அரசு சேதம் அடைந்த பகுதியை சீரமைக்க வேண்டும் என்று தற்போதைய தமிழக அரசுக்கு, விளாத்திகுளம் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன் கோரிக்கை விடுத்துள்ளார்.



## வேலூர் கோட்டையில் அரசு அருங்காட்சியகம் விரிவாக்கம்

### அமைச்சர் விஜய் பாலாஜி திறந்து வைத்தார்

வேலூர், ஜூலை 5

வேலூர் மாவட்டம், வேலூர் கோட்டையிலுள்ள அரசு அருங்காட்சியகம் விரிவாக்கம் செய்யப்பட்டது 2.50 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்ட இந்த அரசு அருங்காட்சியகத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி திறந்து வைத்தார் இதில் மாவட்ட ஆட்சியர் லீலா அலெக்ஸ் சட்டமன்ற உறுப்பினர்கள்வினோத்கண்ணா,சுதாகர்,சிந்து,தென்றால் குமார் ,அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் சரவணன் ஆகியோர்உடன்இருந்தனர்பின்னர்அருங்காட்சியகத்தை அமைச்சர்விஜய்பாலாஜிமற்றும்சட்டமன்றஉறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பார்வையிட்டனர் இந்த விரிவாக்கம்செய்யப்பட்டஅருங்காட்சியகம்மாணவர்கள் சுற்றுலா பயணிகள் ஆகியோர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் இந்த விழா முடிந்து செய்தியாளர்கள் அமைச்சர் விஜய் பாலாஜியை பேட்டி எடுக்க முயன்ற போது பேட்டியை தவிர்த்து காரில் ஏறி சென்றார்..

### கடையாலுமூடு அருகே

## ஆசிரியர் வேலை வாங்கி தருவதாக ரூ. 5 லட்சம் மோசடி

### ஓசூர் தம்பதி மீது வழக்கு

நாகர்கோவில், ஜூலை. 5

மார்த்தாண்டம் அருகே கடையால் பகுதியை சேர்ந்தவர் ஜெகன் வர்கீஸ் மனைவி மேரி வெர்ஜின் (45). இவர் குழித்துறை குற்றவியல் நீதிமன்றம் 1ல் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். மனுவில், ஒசூரை சேர்ந்த பவுல் பிரைட் (51) மற்றும் அவரது மனைவி சுமிதா ஜாஸ்மின் (45) ஆகியோர் எங்களது குடும்ப நண்பர்கள் ஆவார்கள். கணவன் மனைவி இருவரும் ஆசிரியர்களாக உள்ளனர். ஒசூரில் பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார்கள். இவர்கள் தங்களது பள்ளியில் ஆசிரியை வேலை தருவதாக கூறி என்னிடம் ரூ 5 லட்சம் கேட்டனர். நானும் அவர்கள் கேட்டபடி பல்வேறு தவணைகளாக 5 லட்சம் கொடுத்தேன். ஆனால் வேலை தரவில்லை.

இது குறித்து கேட்டபோது ரூ.2.37 லட்சத்தை மட்டும் திருப்பித் தந்தனர். மீதி பணம் ரூ 2.33 லட்சத்தை தரவில்லை. எனவே இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவு வேண்டும் என மனுவில் கூறி இருந்தார். இந்த புகாரின் பேரில் காவல்துறை விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் பேரில் கடையாலுமூடு போலீசார்பவுல்பிரைட்அவரது மனைவிசுமிதாஜாஸ்மின் ஆகிய 2 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### வேலூர் மாவட்டத்தில்

## டாஸ்மாக் பொது மேலாளரை பதவி இடை நீக்கம் செய்ததை கண்டித்து ஆர்ப்பாட்டம்



வேலூர், ஜூலை 5

வேலூர் தோட்டப்பாளையத்தில் அமைந்துள்ள தமிழ்நாடுமாநிலவாணிபக்கழகஅலுவலகத்தில்செயல்பட்டு வரும் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலக வாயிலில் அனைத்து சங்க தொழிலாளர்கள் சார்பில் தமிழக அரசை கண்டித்து தொமுச மாநில பொருளாளர் கோவிந்தராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில் நேர்மையான முறையில் பணி செய்து வரும் மாவட்ட பொது மேலாளர் சத்தியனை எந்தவித முன்னறிவிப்புமின்றி பதவி இடை நீக்கம் செய்த நிர்வாக இயக்குநர் மற்றும் துறை அமைச்சரை கண்டித்தும், இடைநீக்கத்தை ரத்து செய்து மீண்டும் பணியமர்த்த கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில் வேலூர் மாவட்ட தலைவர் ஆனந்த குமார் துணைத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி ராணிப்பேட்டை தலைவர் பாபு, திருப்பத்தூர் தலைவர் ராஜேஷ்கண்ணா மற்றும் அனைத்து சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தேங்கியுள்ள மழை நீரை அப்புறப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை



நாகர்கோவில், ஜூலை 5

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 51வது வார்டு, பறக்கை அருகே உள்ள காமச்சன் பரப்பு பகுதியில் மழை பெய்தாலே தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்பது வாடிக்கையாக உள்ளது. இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் பலமுறை மாநகராட்சி நிர்வாகத்திடம் புகார் மனுக்கள் அளித்தும் இதுவரை எந்தவித நிரந்தர நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மழைநீர் நீண்ட நாட்கள் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் நடமாடுவதற்கும் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும், தேங்கியுள்ள மழைநீரால் கொசு உற்பத்தி அதிகரித்து டெங்கு, மலேரியா உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் நிலவுகிறது. எனவே, காமச்சன் பரப்பு பகுதியில் நிலவும் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் முறையான மழைநீர் வடிகால் வசதியை உடனடியாக ஏற்படுத்தி, தேங்கியுள்ள மழைநீரை அகற்ற மாநகராட்சி நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். என பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்



## நாகர்கோவிலில் சாலையோரம் வாகனம் நிறுத்துவதால் மக்கள் அவதி

### மினி பார்க்கிங் வசதி அமையுமா?

நாகர்கோவில், ஜூலை.5

குமரியின் தலைநகரான நாகர்கோவில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு செட்டிகுளம் சந்திப்பு, கோட்டார் உள்ளிட்ட மக்கள் நெரிசல் அதிகம் உள்ள பகுதிகளில் சாலையின் இருபுறமும் மாநகராட்சி சார்பில் கடந்த சில நாட்களாக நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது ஒரு புறம் நல்ல திட்டமாக இருந்தாலும் கூட, இதே பகுதிகளில் இருசக்கர வாகன ஓட்டிகள் தங்களது வாகனங்களை நிறுத்தி செல்ல பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர். அவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்களுக்கு போக்குவரத்து போலீசார் அவ்வப்போது அபராதமும் விதித்து வருகின்றனர்.

இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுவது, மாநகரில் வேப்பமூடு, மணிமேடை உள்ளிட்ட ஒரு சில இடங்களில் பார்க்கிங் வசதி மாநகராட்சி சார்பில் செய்து கொடுக்கப்பட்டு கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. ஆனால் செட்டிக்குளம் சந்திப்பு, கோட்டார் உள்ளிட்ட இடங்களில் எவ்விதமான பார்க்கிங் வசதியும் இல்லை. இதன் காரணமாகவே மக்கள் இருசக்கர வாகனங்களை சாலையோரம் நிறுத்த வேண்டிய கட்டடாயத்திற்கு தள்ளப்படுகின்றனர். ஆகவே நாகர்கோவில் மாநகரில் 'மினி பார்க்கிங் வசதி ' அமையுமா?? என்ற எதிர்பார்ப்பு பொதுமக்கள், வாகன ஓட்டிகள் மற்றும் சிறுகுறு வியாபாரிகள் மத்தியில் எழுந்துள்ளது. மேலும் போக்குவரத்து போலீசார் வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதித்தாலும் கூட, அவர்களுக்கான வழிமுறைகளை ஏற்படுத்தி தரவேண்டும். மாநகராட்சி நிர்வாகமும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என கோரிக்கையாக உள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.